## கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சியில் மன்ற சாதாரணக் கூட்டம் 14.07.2022 ஆம் தேதி வியாழன்கிழமை காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள்: 1**

### நகர்மன்றத் தலைவர் கொண்டுவரும் தீர்மானம்:–

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட மேலத்தெரு பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் குடிநீர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட உள்ளது. மேற்படி இடம் கடல் பகுதிக்கு 300 மற்றும் 350 மீட்டர் தொலைவில் மட்டுமே உள்ளது. மேலும், இப்பகுதி பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் வெளியில் அதிகம் புழங்கும் பகுதியாகும். எனவே, இப்பகுதி பொதுமக்களுக்கு அதிகம் பயன் இல்லாததும் பாதுகாப்பு தன்மை சிறிதும் இல்லாத பகுதியாகவும் இருப்பதால் இந்த இடத்தில் குடிநீர் மேல்நிலை தொட்டி வைக்கும் முடிவினை மாற்றி, வேறு இடத்தில் அமைக்க இந்நகர் மன்ற துணை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிட்டு கோரிக்கை மனு அளித்துள்ளதை தொடர்ந்து மேலத்தெரு பகுதியில் அமைக்கப்பட உள்ள குடிநீர் மேல்நிலை தொட்டி வைக்கும் முடிவினை மாற்றி, வேறு இடத்தில் அமைக்க கோருதல்.

**தீர்மான எண். 75**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள்: 2</u>**

**I) கீழக்கரை நகர்மன்ற 4வது வார்டு உறுப்பினர் திருமதி.சூரியகலா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 இந்து பஜார் பகுதியில் சுமார் 200 மீட்டர் அளவுக்கு உள்ள வாறுகால் பராமரிப்பின்றி சேதமடைந்து கழிவுநீர் வாலைகளில் ஓடி பொதுசுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துவதால், பொதுமக்கள் வியாபாரிகள் பாதிப்படைவதால் வாறுகால் சீரமைத்து மூடி அமைக்கும் பணி மேற்கொள்ள கோருதல். |

**II) கீழக்கரை நகர்மன்ற 5வது வார்டு உறுப்பினர் திருமதி.எஸ். காயத்ரி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 அன்புநகர் பகுதியில் கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தெருக்களில் குளம் போல் தேங்கி மக்களுக்கு சிரமம் ஏற்படுவதால் கழிவுநீர் பைப்புகள் மூலம் மாட்டுக்கொட்டகை பகுதியில் செல்ல ஏற்பாடு செய்து தர கோருதல். |

**III) கீழக்கரை நகர்மன்ற 6வது வார்டு உறுப்பினர் திருமதி.எஸ். பைரோஸ் பாத்திமா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 மூன்று வழி பாதையில் இருள் சூழ்ந்து காணப்படுவதால் தீய செயல்கள் ஏற்படுகிறது. இதனால் இப்பகுதியில் ஹைமாஸ் விளக்கு அமைத்து தர கோருதல் |
| 2 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 கிழக்குத் தெருவில் கழிவு நீர் பைப்லைன் அமைத்துதர கோருதல். |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மேற்காணும் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

## <u>தீர்மான எண். 76</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 3**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற் கிணங்க, கீழக்கரை நகராட்சியில் முடிக்கப்பட்ட பணிகள் தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனைகள் குறித்த விபரம் கீழ்காணும் நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பர கட்டணம் ரூ.90,697/- மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் | பட்டியல் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தினத்தந்தி, | 2223MDU211019422 / 03.06.2022 | 31661 |
| 2 | மாலை மலர் | MDU-D22060022 / 03.06.2022 | 28586 |
| 3 | மாலை முரசு | ALD22230469 / 12.06.2022 | 15750 |
| 4 | மாலை தமிழகம் | 4929/ 18.06.2022 | 14700 |
| | | **மொத்தம்** | **90697** |

**(கோப்பு எண்.226/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனைகள் குறித்த விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பர கட்டணம் ரூ.90,697/- யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 77**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 4**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களான கட்டண கழிப்பறை, ஆடு வதை செய்யும் கூடம் மற்றும் பேருந்து நுழைவு கட்டணம், (மீன் மார்க்கெட்டில் காலியாக உள்ள 33 முதல் 40 வரையுள்ள 8 கடைகள் மாத வாடகையில்) ஆகிய இனங்கள் 01.04.2022 முதல் 31.03.2025 வரை மூன்றாண்டு குத்தகை உரிமம் விடுவதற்கும், பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மீன்கடைகளை ஒன்பதாண்டு குத்தகை அடிப்படையில் 01.04.2022 முதல் குத்தகை உரிமம் விடுவதற்கும் மற்றும் மக்கள் செய்தி தொடர்பு அலுவலர் இராமநாதபுரம் அவர்கள் மூலம் 08.03.2022ந் தேதி மாவட்ட அளவில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பர கட்டணம் ரூ.18,900/- மட்டும் வழங்க கோரி மக்கள் குரல் நாளிதழ் பட்டியல் எண். 212200444, நாள். 08.03.2022ன்படி இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை ரூ.18,900/- மக்கள் குரல் நாளிதழ் மதுரை நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.852/2021/அ2)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பர கட்டணம் ரூ.18,900/- மக்கள் குரல் நாளிதழ் மதுரை நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.78</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள்: 5</u>**

கீழக்கரை நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021-2022 ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 சர்வே எண். 444/1பி இந்துக்கள் மயானத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கு ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். ந.க.எண்.14006/2021/தி2, நாள். 08.09.2021ன்படி நிர்வாக அனுமதி மற்றும் மதுரை, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளரால் தொழில்நட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் பணிக்கு 07.01.2022 தேதி மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு இயக்குநர், தகவல் மற்றும் செய்தி தொடர்புத் துறை தலைமை செயலகம், சென்னை அவர்களின் மூலமாக மேற்காணும் பணிக்கு 25.01.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை மாநில அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் வெளியீடு செய்த வகைக்கு M/s. சுதா ஆட்ஸ் சென்னை நிறுவனத்திடமிருந்து பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 35280/-க்குரிய பட்டியல் எண்.SA5695, நாள். 09.01.2022ன்படியானது இந்நகராட்சிக்கு 14.02.2022-ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர கட்டணம் ரூ. 35280/- மட்டும் M/s. சுதா ஆட்ஸ் சென்னை நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 384/2021/.இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

ஒப்பந்தப்புள்ளி விளம்பர கட்டணம் ரூ. 35280/- யை M/s. சுதா ஆட்ஸ் சென்னை நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.79</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 6**

இந்நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் **2021–2022** ன் கீழ் ரூ.**5.00** இலட்சத்திற்கு பேருந்து நிலையத்தில் சுற்றுச்சுவர் (Compound wall at Bus Stand) அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் **10.01.2022**–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.**27519–36/2021**–பி2, நாள்.**30.03.2022**ன்படி மேற்காணும் பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு **30.06.2022**ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **நமக்கு நாமே திட்டம் 2021–2022** | | | | |
| 1. | பேருந்து நிலையத்தில் சுற்றுச்சுவர் (Compound wall at Bus Stand) அமைக்கும் பணி | 5.00 | திரு. எஸ். முரளி ஒப்பந்ததாரர், 1/59, மறவர் தெரு, கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | திருமதி. பாத்திமா ரில்வானா, ஒப்பந்ததாரர், 130பி, வடக்குத் தெரு, கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட 0.55% அதிகம் |

**(கோப்பு எண். 623/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ். முரளி என்பவருக்கு 04.07.2022 தேதி மேற்காணும் பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளதையும், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 80**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 7**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் 07.04.2022ல் நடைபெற்ற சட்டமன்ற கூட்ட தொடரில் தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் (2022–23) புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழஙகப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமமின்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும் எனதெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1நாள். 16.06.2022ன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தகுதியான சாலையோர வியாபாரிகளை கணக்கெடுப்பு பணிக்கு Plan of Actionஅட்டவணையின்படி, 20.06.2022 அன்று இவ்வலுவலக கடிதம் 250/2022/எப்1, நாள். 20.06.2022ன்படி ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளியாக 04.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **Survey of Street Vendor Scheme 2022-2023** | | | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தகுதியான சாலையோர வியாபாரிகளை கணக்கெடுப்பு பணி | 1.00 | குட் ஹோப் 50, 8வது தெரு, ஜவஹர் நகர், திருமஙகலம், மதுரை. | மதிப்பீட்டு தொகையே கொடுத்துள்ளார். |
| | | | ரீட் டிரஸ்ட், மதுரை. | மதிப்பீட்டு தொகையை விட 8.33% அதிகம் |

**(கோப்பு எண். 250/2022/எப்1)**

**அலுவலகக் குறிப்பு:**

1) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையையே ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் மதுரை, குட் ஹோப் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
2) நகர்மன்ற தலைவர் அவர்களின் 08.07.2022 ம் தேதி முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அனுமதிக்கலாம்
3) மேற்காணும் திட்டத்திற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், பின்னர் அரசிடமிருந்து மானியம் பெறப்பட்டவுடன் இந்நகராட்சி நிதியில் ஈடு செய்யலாம்.

**தீர்மான எண். 81**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 8**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2021–2022 ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட இந்துக்கள் மயானத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைப்பது சம்மந்தமாக கடந்த 05.07.2022 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் தலைமையில் கீழக்கரை செ.மு.மீ. மஹாலில் சமாதான கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு கீழ்க்காணும் விவரப்படி இந்நகராட்சி மின்பணியாளர் திரு.எம். இரமேஷ் அவர்களால் செலவு செய்யப்பட்டதற்குண்டான பட்டியல் தொகை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை இந்நகராட்சி பொறியாளர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது இந்நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விபரம் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 05.07.2022 அன்று கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2021–2022 இந்நகராட்சிக்குட்பட்ட இந்துக்கள் மயானத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைப்பது சம்மந்தமாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் தலைமையில் கீழக்கரை செ.மு.மீ. மஹாலில் நடைபெற்ற சமாதான கூட்டத்திற்கு தேவையான மஹால் வாடகை, மைக் செட், ஒலி, ஒளி அமைத்தல், தேநீர், பிஸ்கட் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் வாங்கிய வகைக்கு பட்டியல் தொகை | ரூ.10,425/– |

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சி மின்பணியாளர் திரு.எம். இரமேஷ் அவர்களால் செலவு செய்யப்பட்டதற்குண்டான பட்டியல் தொகை ரூ.10,425/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 82**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 9**

கீழக்கரை நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19ன் கீழ் பள்ளமோர்குளம் கிராமம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவுநீர் சுத்திகரிப்பு கட்டிட அமைப்பு (Fecal Sludge and Septage Management-Fecal Sludge Treatment Plant) பணிகள், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.**26888**/UGSS**–2/2018–1** நாள்.**11.12.2018**ன்படி, **14.11.2019**ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கீழ்காணும் பணிக்கு ஒப்பந்ததாரர் M/s. AD Construction, சென்னை அவர்களுக்கு **06.12.2019**ந் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டது.

| **வ. எண்.** | **திட்டப்பணியின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| **1.** | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19ன் கீழ் பள்ளமோர்குளம் கிராமம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு Fecal Sludge and Septage Management-Fecal Sludge Treatment Plant) அமைக்கும் பணி. 20 KLD. | **340.00** இலட்சம் |

இப்பணிக்குண்டான காலம் ஒரு வருடம் (பணி முடிவுறும் நாள். **05.12.2020**) என குறிப்பிட்டு ஒப்பந்ததாரர் முத்திரை தாளில் **09.12.2019–**ம் தேதி ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளார். இப்பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்பதால், தொடர்ந்து இவ்வலுவலக அறிவிப்புகள் **03.01.2020, 12.03.2020, 22.06.2021, 21.09.2021, 29.09.2021, 12.04.2022, 13.05.2022** மூலமும், நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் கைபேசி மூலம் பணிகளை துரிதப்படுத்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

இப்பணியினை ஒப்பந்ததாரர், ஒப்பந்த நிபந்தனையின்படி **05.12.2020**ம் தேதிக்குள் முடித்திருக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் முடிவு பெறாத நிலையில் பொதுசுகாதார நன்மை கருதியும், பொதுசுகாதார செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டிய நிலையிலும், பணியினை விரைந்து முடிக்க பதிவு தபால் மூலம் அறிவுறுத்தியும், எவ்விதமான முன்னேற்றமும் மேற்கொள்ளாமல் இருந்ததால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வு கூட்டத்தின் போது உரிய காலத்திற்குள் விரைந்து பணியினை முடித்து கொடுக்க தெரிவிக்கப்பட்டது. பணியினை முடிப்பதற்கான செயல்திட்ட அறிக்கை (Work Action Plan Report) **18.05.2022**ம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் ஒப்பந்ததாரர் M/s. AD Construction, சென்னை நிறுவனம் கையொப்பமிட்டு ஒப்படைத்த நிலையில் எந்தவித பணிகளும் மேற்கொள்ளாமல் இருந்துள்ளார்.

மேலும், உயர் அலுவலர்களால் தொடர்ந்து, ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரை இப்பணியினை விரைந்து முடிக்க கோரி எச்சரிக்கை செய்யப்பட்டு வந்த நிலையில், **08.06.2022–**ந் தேதிய சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொலி ஆய்வுக் கூட்டத்தில், திட்டப்பணி மிகவும் காலம் கடந்த நிலையில் உள்ளதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படாததாலும், ஒப்பந்ததாரருக்கு இறுதி அறிவிப்பு வழங்கி, ஒப்பந்தப்பணியினை ரத்து செய்யுமாறு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, ஒப்பந்ததாரர் M/s. AD Construction, சென்னை நிறுவனத்திற்கு **09.06.2022**ந் தேதி அன்று இறுதி அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதற்கும் அவர்களிடமிருந்து எந்தவொரு தகவலும் வரப்பெறவில்லை. எனவே, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி மேற்கண்ட திட்டப் பணியினை உரிய காலத்திற்குள் முடிக்காமல், காலம் கடத்தியதால், ஒப்பந்த நடைமுறை விதிகளின்படி ஒப்பந்ததாரர் M/s. AD Construction, சென்னை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட **06.12.2019**ந் தேதிய பணி உத்திரவு (Work order ) மற்றும் ஒப்பந்தம் ஆகியவற்றினை **14.06.2022**ந் தேதி ரத்து செய்து ஆணையாளர் அவர்களால் உத்திரவிடப்பட்டது மற்றும் இப்பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டும், பொதுசுகாதார நலன் கருதி, மீதமுள்ள ஏற்கெனவே, ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் போக மீதமுள்ள பணிகளுக்குரிய திருத்திய மதிப்பீடு தொகை ரூ.**220.55** லட்சத்திற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பியது இந்நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1022/2018/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

இந்நகராட்சிக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மேற்காணும் பணிகள் உரிய காலத்திற்குள் முடிக்காததால், பொது நன்மை கருதியும், அத்தியாவசிய பொதுசுகாதார செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டிய சூழல் இருக்கின்ற நிலையில் ஒப்பந்த நடைமுறை விதிகளின்படி ஒப்பந்ததாரர் M/s. AD Construction, சென்னை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்திரவினை ரத்து செய்யப்பட்டுள்ளது மற்றும் திருத்திய மதிப்பீடு தொகை ரூ.220.55 லட்சத்திற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது இந்நகர்மன்றத்தின் பார்வைக்கு.

**<u>தீர்மான எண். 83</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**ஒப்பம்/— பை. செஹனாஸ் ஆபிதா**
**நகர்மன்ற தலைவர்**
**கீழக்கரை நகராட்சி**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**